Regd.with RNI No.:TNTAM/2014/60345, Postal Regd.No.:TRY/092/2022-2024 (with prepayment)
Posted at Trichy RMS on 27th, 28th, 29th of every month; Date of publication 25th or 26th of every month










Published by Dr.Jane Joshua on behalf of ANBARIN OOZHIYAM published from
No.40, Seventhi Pillaiyar Koil Street, Woraiyur, Trichy - 620 003 and printed by Mr. D. Asu Selvaraj
at Angel Printers, 1/459-c, N.G.O. Colony, Satchiyapuram, Sivakasi West - 626 124, South India.
Editor : Dr.Jane Joshua, M.B.A., Ph.D.,

# அன்பரின் ஊழியம்

## ANBARIN OOZHIYAM

மலர்:8 இதழ்:9 செப்டம்பர் 2022 தனிபிரதி- ரூ.20/- ஆண்டு சந்தா- ரூ.200/-
VOL: 8 ISSUE NO : 9 September 2022 Single Copy - Rs 20/- ANNUAL SUBSCRIPTION: RS 200/-

# இதிலும் பெரிதானவைகளைக் காண்பாய்

யோவான் 1:50



# தீர்க்கதரிசனத்தின் வல்லமை



## தீராத வியாதிகள் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் சுகமாயிற்று!

எனது மகள் பத்தாம் வகுப்பு படிக்கிறாள். நன்றாக படிக்கக் கூடியவள், என்னவென்று தெரியவில்லை. சரியாக படிக்காமல் அடம் செய்தாள், அடிக்கடி கோபப்பட ஆரம்பித்தாள். திடீர் திடிரென்று மயங்கி விழுந்துவிடுவாள். இதனால் மகளை நினைத்து மிகவும் கவலையடைந்தோம். இந்நிலையில் மார்த்தாண்டத்தில் நடைபெற்ற Dr.ஆனந்த ஸ்திரா அவர்கள் கூட்டத்திற்கு மகளை அழைத்து வந்தோம். அந்த நாளில் அரங்கத்தில் அதிகக் கூட்டம் காணப்பட்டது. எப்படி சகோதரரை சந்திக்கப் போகிறோம் என்ற கேள்விக்குறியோடு காத்திருந்தோம். கூட்ட முடிவில் தனி ஜெப வேளையில் எங்கள் முறை வரும்பொழுது மகளை அன்போடு அழைத்து நாங்கள் சொன்ன காரியங்களை கேட்டறிந்து **"மகளுக்கு சில ஆலோசனைகளை அன்பாக கூறினார்கள். பிற்பாடு நானும் மகளும் ஜெபத்திற்காக காத்திருந்த வரிசையை விட்டு கொஞ்ச தூரம் சென்றோம். அப்பொழுது திடிரென்று சகோதரர் மகளை அழைத்து "மகளே! நான் ஒரு கேள்வி கேட்கிறேன் பதில் சொல்கின்றாயா?"** என்றார். அதற்கு மகள் கேளுங்கள் என்றாள். அப்பொழுது என் மகளுக்கு சிறு வயதிலிருந்து வருகிற தீராத வலிப்பு நோயை குறித்து கேட்டார்கள். வலிப்பு நோயைக் குறித்து நாங்கள் சொல்லாமல் இருந்த பொழுதும் கர்த்தர் தாமே தீர்க்கதரிசிக்கு அந்த நோயை வெளிப்படுத்தினார். தேவனுடைய உண்மையான தீர்க்கதரிசி சொன்னது எங்களை ஆச்சரியப்படுத்தியது. பிறகு மகளை அன்போடு அரவணைத்து கவலைப்படாதே மகளே! என சிறு ஜெபம் செய்துவிட்டு தொடர்ந்து மூன்று நாள் உனக்காக ஜெபிக்கிறேன் என்று கூறினார். இரவும், பகலும் சகோதரர் கண்ணீரோடு ஜெபித்தார்கள். மூன்றாம் நாளில் மகளை தொலைப்பேசியில் அழைத்து ஜெபித்தார்கள். அந்த நாளிலிருந்து மகள் சுகமடைய ஆரம்பித்தாள். கர்த்தர் மகளுக்கு செய்த மாபெரும் அற்புதத்தை ஆகஸ்ட் மாதம் 15ம் தேதி நாகர்கோவிலில் நடைபெற்ற கூட்டத்தில் சாட்சியாக சொல்கிறோம். மகள் இப்பொழுது நன்றாக படிக்கிறாள். மயங்கி விழுவதில்லை. பரிபூரண விடுதலையை மகளுக்கு தேவன் அருளி உள்ளார்.



மார்த்தாண்டம் கூட்டத்தில் ஜெபிக்கும் காட்சி

நாங்கள் மிகவும் ஏழைகளாக இருந்தாலும், ஒவ்வொரு நாளும் என் மகள் தன்னுடைய அன்பு தாத்தா என சகோதரருக்காக மறவாமல் ஜெபிப்பாள். எங்களுக்கு கிடைக்கும் குறைந்த வருமானத்தில் ஒரு பகுதியை குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்திற்கு தருகின்றோம். மகள் மருத்துவம் படிக்க ஆசைப்படுகிறாள். கர்த்தருக்கு மகிமை உண்டாவதாக!

- திருமதி. ஹெலன், நாகர்கோவில்



நாகர்கோவில் கூட்டத்தில் சாட்சி கூறும் வேளை

# BIBLIO THEOLOGICAL FOUNDATION COURSE - 2022



**நாள் & நேரம்**

அக்டோபர் 3-ம் தேதி மாலை 4 மணி முதல்
அக்டோபர் 5-ம் தேதி மதியம் 2 மணி வரை

**இடம் : அன்பரின் ஊழிய ஜெபஸ்தலம், தில்லைநகர், திருச்சி.**



## Rev. Dr. A. ஜாஷ்வா

- பழைய ஏற்பாடு
- புதிய ஏற்பாடு
- இறையியல்
- நற்செய்திப் பணி
- அருட்பணி
- ஆலோசனை பணி
- ஆராதனை
- கிறிஸ்தவ கல்வி
- சமயம்
- திருச்சபை வரலாறு
- விவிலிய கலைச்சொற்கள்

தமிழிலும் ஆங்கிலத்திலும் கற்றுத் தரப்படும்

அனைத்து வகுப்பிலும் கலந்து கொள்பவர்களுக்கு மட்டும் அழகிய சான்றிதழ் வழங்கப்படும்

முழு நேர ஊழியர்கள், பகுதி நேர ஊழியர்கள், விசுவாசிகள், சபை அங்கத்தினர்கள் ஆண் / பெண் இருபாலரும் கலந்து கொள்ளலாம்.
வயது வரம்பு கிடையாது.
12 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு மட்டும் அனுமதி கிடையாது.

3 நாட்கள் உணவு மற்றும் தங்குமிடம் முற்றிலும் இலவசம்

குறைந்த இருக்கைகள் மட்டும் உள்ளதால் உங்கள் இருக்கைக்கு முந்துங்கள்



பதிவுக் கட்டணம் ரூ. 200/-
பயிற்சிக் கட்டணம் ரூ. 1000/-

மேலும் விபரங்கள் அறிய : 73585 66066
வாட்ஸ் அப் மட்டும் : 99446 66066



# அன்பரின் ஊழியம்

மலர்:8 ◆ செப்டம்பர் 2022 ◆ இதழ் 9

## உங்கள் ஆசிரியரிடமிருந்து...

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே,

ஒவ்வொரு மாதமும் இந்த பத்திரிக்கையின் வாயிலாக உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். நீங்கள் அனைவரும் தொடர்ந்து பரிபூரண ஆசீர்வாதங்களுடன், நல்ல சவுக்கியத்துடன் வாழ ஜெபிக்கிறேன்.

அசாத்தியமானவைகளை சாத்தியமாக்கும் தேவனை நாம் வணங்குகிறோம். எனவே உங்கள் வாழ்க்கையில் என்ன போராட்டம் பிரச்சனைகள் இருந்தாலும் கர்த்தரையே முழுமையாக நம்பி, அவரையே சார்ந்து ஜீவிக்க கற்றுக்கொள்ளுங்கள்.

இயேசுவின் இரத்தத்தால் நாம் கழுவப்பட்டு, அவருடைய பிள்ளைகளாக இருக்கிறோம். ஆகவே மனிதரால் கூடாத காரியங்களை செய்து முடிக்கும் தேவனிடத்தில் சகலத்தையும் கேட்டு பெற்றுக்கொள்ள எல்லா உரிமையும் நமக்குண்டு. எனவே சோர்ந்து போகாதிருங்கள். **மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான். யோவான் 14:12.** இந்த வேத வசனங்கள் உங்கள் வாழ்க்கையில் நிறைவேற நாங்கள் ஊக்கமாய் ஜெபிக்கிறோம்.

ஆகஸ்ட் மாதம் நடந்து முடிந்த எல்லாக் கூட்டங்களிலும் கர்த்தர் தாமே வல்லமையாய் கிரியை செய்தார். மக்கள் தாகத்தோடு கூட்டங்களுக்கு வருவதை நினைத்து கர்த்தரை துதிக்கிறோம். **நீங்களும் உங்கள் பகுதிகளில் நம் கூட்டங்கள் நடைபெறும்பொழுது கலந்துக் கொள்ளுங்கள். கர்த்தர் தாமே உங்கள் வாழ்வில் பலத்த வல்லமையான காரியங்களைச் செய்வார்.**

அன்பரின் ஆறுதல் டி.வி. நிகழ்ச்சிகள் இன்னும் அனேக மொழிகளில் அனேக சேனல்களில் ஒளிப்பரப்பாக ஜெபியுங்கள்.

கடந்த மாதமும் S.J.Saves Trust மூலமாக ஏழை, எளிய மக்களுக்கும், டியூஷன் சென்டரில் படிக்கும் பிள்ளைகளுக்கும் பல உதவிகளை

ஆசிரியர் / வெளியிடுபவர்: **Dr. ஜேன் ஜாஷ்வா**

| சந்தா விபரம் | | | |
|---|---|---|---|
| இந்தியா | : | ஆண்டு சந்தா ரூ.200/-. | ஆயுள் சந்தா ரூ.2,000/-. |
| வெளிநாடு | : | ஆண்டு சந்தா ரூ.1,500/-. | ஆயுள் சந்தா ரூ.15,000/-. |


அவசர ஜெப உதவிக்குத் தொலைபேசி எண்கள்: **(0431) 2765386, 2765952, 2760603, 2760604, 2760605 (24** மணி நேரமும்)

**Telugu & Hindi** : 99445 36343, **Malayalam** : 94889 32937, **Kannada** : 90031 17205

e-mail: **info@mojindia.org** website: **www.ministryofjesus.in**

முகவரி:- அன்பரின் ஊழியம், 40, S.P.K. தெரு, உறையூர், திருச்சி - 620 003. Address:- Ministry of Jesus, 40, S.P.K. Street, Woraiyur, Trichy - 620 003.

செய்தோம். இந்த பணியில் எங்களோடு இணைந்து தாங்கி வருகிற உங்களை கர்த்தர் நினைத்து அதிகமாய் ஆசீர்வதிப்பார்.

**ஊழியத்தில் எங்களுடன் இணைந்து பணிபுரிவதற்கு பல துறை சார்ந்த மக்கள் தேவைப்படுகின்றனர்.** எனவே உங்களுடைய பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் வேலை தேடிக் கொண்டிருப்பார்கள் என்றால் உடனே எங்களோடு தொடர்பு கொள்ளச் செய்யுங்கள். இ.மெயில் ID:info@mojindia.org வேலைவாய்ப்பு பற்றிய முழு விபரங்களும் அறிய பத்திரிக்கையின் 13-ம் பக்கத்தில் பார்க்கவும்.

செப்டம்பர் மாதம் 2,3, தேதிகளில் **Ministry of Jesus you tube** சேனல் வாயிலாக நடைபெறும் நேரலை **(Live)** நிகழ்ச்சியை பாருங்கள். உங்கள் நண்பர்களுக்கும் **Share** செய்யுங்கள்.

தொடர்ந்து எங்களுக்காக, விசேஷமாய் எங்கள் பெற்றோரின் சுகத்திற்காக அனுதினமும் ஜெபியுங்கள். எங்களை தனியே சந்தித்து ஜெபிக்க விரும்புகிறவர்கள், விசேஷித்த பொருத்தனை காணிக்கையை தர விரும்புகிறவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்புக்கொண்டு முன் அனுமதி பெற்று வாருங்கள். தொலைபேசி எண்: 94888 45627

கிறிஸ்துவின் பணியில்
**Dr. ஜேன் ஜாஷ்வா**

## இம்மாத வாக்குத்தத்தம்

யோபு 9:10; 1சாமுவேல் 1:27
மத்தேயு 6:11; 1கொரி. 16:13,14

## இதயம் தொட்ட எண்ணம்

**சாத்தியமற்றவைகள் நிறைவேற ஜெபிப்பது கிறிஸ்துவை பின்பற்றுகிற ஒவ்வொருவருக்கும் உரிய அடிப்படை உரிமை!**

**Praying for the impossible to happen is the fundamental right of every follower of Christ!**




**ஊழியத்திற்கு காணிக்கை அனுப்புகிறவர்கள் கீழ்க்காணும் மூன்று வங்கிக் கணக்குகளில் அனுப்பலாம்**

| Dr. ANANDA STIRA | ANBARIN OOZHIYAM | MINISTRY OF JESUS |
|---|---|---|
| Account No. | Account No. | Account No. |
| 10848469699 | 10848559426 | 10848474869 |

**State Bank of India, Cantonment, Trichy Main Branch**
**IFS Code : SBIN 0000930**

**மேற்கண்ட வங்கியின் மூலமாக நீங்கள் காணிக்கை அனுப்பிய உடன் எங்களது Cell No : 95004 87061 என்ற எண்ணிற்கு காணிக்கை அனுப்பிய விவரத்தை கூறலாம். அல்லது SMS மூலம் தெரிவிக்கலாம்.**

**உங்கள் காணிக்கைகளை அனுப்ப மேலும் ஒரு எளிய வழி**

← இந்த QR Code – ஐ உங்கள் செல்போனில் ஸ்கேன் செய்து அல்லது Cell No : 95004 87061 என்ற எண் மூலமும் அனைத்து பணப்பரிமாற்றம் செய்யும் செயலிகள் (Google pay, Paytm, PhonePe etc.,) மூலமாகவும் எங்கள் மேற்கண்ட வங்கிக் கணக்குகளுக்கு காணிக்கை அனுப்பலாம்.

## எமது You Tube சேனல்களை Subscribe செய்யவும்


Ministry of Jesus - Dr. Ananda Stira


Dr Jane Joshua

My Deliverance Church

## எமது முகநூல் பக்கங்கள் (Face book)

- Ministry of Jesus (Anbarin Oozhiyam) @ministryofjesus.in
- Ananda Stira @dranandastira
- Margretstira
- Jane Joshua @DrJaneJoshua
- My Deliverance Church @mydeliverance.church
- Rev.Dr.A. Joshua @RevDrAJoshua

Ministry of Jesus
dr. janejosh
jonathanmosesrajstira

ministryofjesus.in

drjane15

## கன்னியாகுமரி மற்றும் சென்னை பகுதியிலுள்ள அன்பரின் ஊழியப் பங்காளர்கள் கவனத்திற்கு

நமது அன்பரின் ஊழியப் பிரதிநிதிகளாக கீழ்க்கண்டவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள் எனவே உங்கள் ஜெப வேண்டுதல்களை அவர்களிடம் கூறி ஜெபித்துக் கொள்ளலாம். மேலும், நமது ஊழிய விபரங்களையும் அவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

**கன்னியாகுமரி : 82203 17472**
**சென்னை : 77081 53666**



# "இதிலும் பெரிதானவைகளை காண்பாய்"

## யோவான் 1:50

### தேவ செய்தி
### Dr. ஜேன் ஜாஷ்வா

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே!

இந்த மாத வாக்குத்தத்தச்செய்தியின் வழியாக உங்களை சந்திப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். ஜெபத்தோடு செய்தியை வாசியுங்கள். கர்த்தர் இந்த செய்தியின் மூலமாக உங்களோடு பேசுவார். உங்கள் வாழ்விலும் பெரிதானவைகளைக் காணச்செய்வார்.

**இதிலும் பெரிதானவைகளைக் காண்பாய்!** என்ற சத்திய வேதவார்த்தை இயேசுகிறிஸ்து தாமே நாத்தான்வேலிடத்திலே கூறியதாகும். இந்த நாத்தான்வேலை குறித்து வேதத்தில் நாம் அநேக இடங்களில் வாசிக்க முடியாது. **யோவான் 1:45** முதல் **51** வசனங்களிலும், **யோவான் 21:2ல்** மாத்திரமே நாத்தான்வேலை குறித்து எழுதப்பட்டிருக்கிறது. யோவானை தவிர மற்ற மூன்று நற்செய்தி நூல்களாகிய மத்தேயு, மாற்கு, லூக்கா ஆகியவற்றில் நாத்தான்வேல் என்ற பெயர் இடம் பெறவில்லை. நாத்தான்வேலின் மறுபெயர் பர்தொலொமேயு என வேத வல்லுநர்கள் கூறுகின்றனர். இதுவும் உண்மையாக இருக்கலாம். ஏனென்றால் யோவான் சுவிசேஷத்தில் நாத்தான்வேல் என்று எழுதப்பட்டிருக்கிறது. பர்தொலொமேயு என்ற பெயர் இல்லை. மத்தேயு, மாற்கு, லூக்கா சுவிசேஷத்தில் பர்தொலொமேயு என குறிப்பிடப்பட்டு இருக்கிறது நாத்தான்வேல் என்ற பெயர் எழுதப்படவில்லை. இந்த இரு நபர்களும் ஒருவராகவே கருதப்படுகின்றது.

பிலிப்பு என்பவன் தான் முதலில் நாத்தான் வேலிடத்தில் இயேசுவை குறித்து சொல்கிறான். நாத்தான்வேலோ அதை நம்பவே இல்லை. மேசியாவினுடைய (Origin) தோற்றத்தை குறித்து நாத்தான்வேல் மிகவும் சந்தேகப்படுகிறான். ஆகவே 46வது வசனத்தில் **நாசரேத்திலிருந்து யாதொரு நன்மை உண்டாகக் கூடுமோ** என்று சந்தேகத்தோடு கேட்கிறான். பிலிப்பு வந்து பார் என்று சொன்னதின் பேரில் நாத்தான்வேல் இயேசுவினிடத்தில் வருகிறான். இயேசு அவனை பார்த்து **"அத்தி மரத்தின் கீழ் அவனை கண்டதை குறித்து சொன்ன பொழுது அவன் பிரமமித்து போய்", "நீர் தேவனுடைய குமாரன், இஸ்ரவேலின் ராஜா"** என்று கூறுகிறான். அதற்கு பதிலாகத்தான் இயேசு **"இதிலும் பெரிதானவைகளை காண்பாய்"** என்கிறார்.

பிரியமானவர்களே! நாமும் கூட நாத்தான் வேலை போல பல சமயங்களில் சந்தேகத்தினால் கேள்விகளினால் நிறைந்து காணப் படுகிறோம். இது இயேசு கிறிஸ்து சொன்னதுதானா? இவை பரிசுத்த ஆவியான வருடைய வழி நடத்துதலா? உண்மை யாகவே நான் தேவ சித்தத்தின்படிதான் செய்கிறேனா? என்றெல்லாம் நினைக்கலாம். இன்றைக்கு இயேசு உங்களைப் பார்த்து சொல்கிறார் **"இதிலும் பெரிதானவைகளை காண்பாய்"** என்று. இதிலும் பெரிதானவைகள் என்றால் என்ன? பெரிதானவைகள் எவைகள்?

## 1. பெரிதான கட்டளை - பெரிதான ஊழியம்

யூத கலாச்சாரத்தின்படி யூத நடை முறை களின்படி எல்லா போதகர்களும், தீர்க்கதரிசிகளும் அவரவர் தங்களுக்கு என்று சில கோட்பாடுகளை, நெறிமுறைகளை வைத்திருந்தனர். அவர்களில் யாரும் மோசேயை காட்டிலும் பெரியவர்கள் அல்ல. ஆனாலும் அவர்கள் எல்லாரும் மோசேயின் கட்டளைகளோடு சில நெறிமுறைகளை இணைத்தனர். அதேபோல இயேசுவும் ஒரு புது போதகர், அவரும் மோசேயின் கட்டளைகளோடுகூட தன்னுடைய சில அறிவுரைகளையும் அதோடு

சேர்த்துக் கொள்வார் என்று தான் யூத மக்கள் நம்பினர். அது உண்மையாக இருக்கலாம். ஆனால் இயேசுவோ அதைக் காட்டிலும் மிகப்பெரிய ஒரு மாற்றத்தை உண்டாக்குபவராக இருந்தார். அவர் சொன்ன கற்பனைகள் எல்லாம் அன்பை பிரதானமாக கொண்டதாக இருந்தது. அதுவரையிலும் ஜனங்கள் **"கண்ணுக்கு கண், பல்லுக்கு பல்"** என்ற கட்டளையை பின்பற்றி வந்தனர். ஆனால் இப்பொழுதோ இயேசு **"உங்கள் சத்துருக்களை நேசியுங்கள், உங்களை சபிக்கிறவர்களுக்காக ஜெபம் பண்ணுங்கள்" (மத்தேயு 5:38-48)** எனக் கூறினார். மோசேயின் அனைத்து கட்டளைகளையும் இரண்டே கட்டளையாக கொடுத்தார் இயேசு!

**இயேசு அவனுக்கு பிரதியுத்தரமாக: கற்பனைகளிலெல்லாம் பிரதான கற்பனை எதுவென்றால்: இஸ்ரவேலே கேள், நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்.**

**உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக என்பதே பிரதான கற்பனை. இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால்: உன்னிடத்தில் நீ அன்பு கூருவதுபோல் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்பதே; இவைகளிலும் பெரிய கற்பனை வேறொன்று மில்லை என்றார் - மாற்கு 12: 29 31.**

**இயேசுவினுடைய ஊழியத்தில் அன்பிற்கு முதலிடம் கொடுக்கப்பட்டது. இந்த அன்பை காட்டிலும் பெரிதான ஊழியம் வேறு ஒன்றுமில்லை.**

கர்த்தராகிய தேவன் இந்த மனுக்குலத்தை பிரித்து பார்ப்பவர் கிடையாது. பட்சபாதம் உள்ளவர் அல்ல என்று வேதம் கூறுகிறது. இயேசுவும் இவ்வாறே பிரசங்கித்தார். **மத். 5:45 "நம்முடைய பரம பிதா நல்லோர் மேலும் தீயோர் மேலும் தம்முடைய சூரியனை பிரகாசிக்கப் பண்ணுகிறவராக இருக்கிறார்"** என்று சொல்கிறது இயேசு மக்கள் மத்தியிலே வித்தியாசத்தை காட்டவில்லை. அவர் அனைவரையும் ஒன்று போல நேசித்தார். குஷ்டரோகியை தொட்டார், பெரும்பாடுள்ள ஸ்திரீயை குணமாக்கினார், ஆயக்காரனையும், லேவியனையும் தம் சீஷனாக அழைத்தார். சகேயுவின் வீட்டிற்கு சென்றார், நூற்றுக்கு அதிபதி வீட்டிற்கும் செல்வதற்கு ஆயத்தமாக இருந்தார். நூற்றுக்கு அதிபதியின் வேலைக்காரனை சுகப்படுத்தினார். கானானிய ஸ்திரீயின் மகளை விடுதலை செய்தார். இது தான் இயேசுவின் அன்பு. இயேசு யூதர்களுடைய சகல கோட்பாடுகளையும், நம்பிக்கைகளையும், சட்ட திட்டங்களையும் தம்முடைய அன்பினால் மேற்கொண்டார். அவரை போஜனப்பிரியன், ஆயக்காரனுக்கும், பாவிகளுக்கும் சிநேகிதன் என்று கூறினர். இயேசுவோ, அன்பு தான் முக்கியம் சட்ட திட்டங்களும், மூட நம்பிக்கைகளும் அல்ல என்பதை நிரூபித்தார். ஆயக்காரர்களும், பாவிகளும் உங்களை காட்டிலும் துரிதமாக பரலோக ராஜ்ஜியத்திற்குள் பிரவேசித்து விடுவார்கள் என்றார். இது அவர்களுக்கு மிகப் பெரிய அதிர்ச்சியாக இருந்தது. **மத்தேயு 8:11-12ல்** நாம் பார்க்கிறபடி **"அநேகர் கிழக்கிலும் மேற்கிலுமிருந்து வந்து, பரலோக ராஜ்யத்தில் ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்களோடே பந்தியிருப் பார்கள். ராஜ்யத்தின் புத்திரரோ புறம்பான இருளிலே தள்ளப்படுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கு மென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்"** என்றார். யூதர்கள் ஒருவரும் இதை நம்பவில்லை. உண்மையாகவே மோசேக்கு கொடுக்கப்பட்ட கட்டளைகளை தான் அவர்கள் தங்களுடைய எண்ணத்திற்கும், விருப்பங்களுக்கும், மூட நம்பிக்கைகளுக்கும் ஏற்றாற்போல மாற்றிக் கொண்டனர். ஆனால் இயேசுவினுடைய பிரதான உபதேசம் என்ன? **மத்தேயு 23:23 "மாயக்காரராகிய வேதபாரகரே பரிசேயரே உங்களுக்கு ஐயோ, நீங்கள் ஒற்தலாமிலும் வெந்தையத்திலும் சீரகத்திலும் தசமபாகம் செலுத்தி, நியாயப்பிரமாணத்தில் கற்பித்திருக்கிற விசேஷித்தவைகளாகிய நீதியையும் இரக்கத்தையும் விசுவாசத்தையும் விட்டுவிட்டீர்கள், இவைகளையும் செய்ய வேண்டும், அவைகளையும் விடாதிருக்க வேண்டும்"** என்று இயேசு கூறுகிறார். ஒருவன் ஆலயத்தில் காணிக்கை போடுவதால் தன் அருகாமையில் இருக்கிற தரித்திரர்களை மறந்துவிட முடியாது. ஒருவன் நேரத்திற்கு நேரம் ஜெபம் செய்தால் போதும், தன் மனைவியை இழிவுப் படுத்தலாம் என எண்ணிவிட முடியாது. தேவனிடத்தில் அன்பு செலுத்துகிற நாம், தொடர்ந்து எல்லா மனிதரிடத்திலும் அன்பு செலுத்த கர்த்தர் விரும்புகிறார். அன்பு செய்வது ஒன்றே இயேசு நமக்கு கொடுத்த மிகப்பெரிய உபதேசம். இத்தகைய அன்பிற்கு நாம் முக்கியத்துவம் கொடுக்காவிட்டால் இயேசு சொன்னது போல நாமும் வெள்ளை அடிக்கப்பட்ட கல்லறைகளைபோல மாறிவிடுகிறோம்.

மாயமான தாழ்மையை தேவன் தேடுவது கிடையாது. மாம்ச சிந்தை நமக்கு உண்டாகும் பொழுது நாம் உலகத்தில் இருக்கிற பலவிதமான சட்ட திட்டங்களுக்கும், கோட்பாடுகளுக்குமே கீழ்ப்படிந்து நடக்க முயற்சிப்போம். மாம்ச சிந்தை ஆவியின் வழி நடத்துதல் அல்ல. இவைகள் எல்லாம் அனுபவிக்கிறதினால் அழிந்து போகிறது என்று பவுல் கூறுகிறார். நமக்கு சுய இஷ்டமான ஆராதனைகள், மாயமான தாழ்மை, சரீர ஒடுக்குதல் போன்ற இதெல்லாம் மாம்சத்தை பேணுகிறதே அல்லாமல் வேறு ஒன்றுக்கும் பிரயோஜனப்படாது **(கொலோசெயர் 2: 20-23).**

ஆம் பிரியமானவர்களே! **நாமும் கூட பெரிதான இந்த உபதேசமாகிய இயேசுவின் அன்பை பிரதிபலிக்கிறவர்களாக மாறுவோம். அவர் நமக்குள் வாசம் செய்யும் பொழுது நாம் நம்முடைய பழைய சுபாவங்களை அழித்து, பாவத்திற்கு மரித்து அவருக்குள் புதிதான ஜீவனை பெற்றுக் கொள்கிறோம். இயேசுவே நமக்குள் பிழைக்கிற வராக இருக்கிறார்.** அவர் நமக்குள் பிழைக்கும் பொழுது நாம் உலகத்தின் நியதிகளையும், பாரம் பரியங்களையும் பின்பற்ற வேண்டிய அவசியமில்லை. இதைத் தவிர வேறு ஒரு உபதேசம், பெரிதான ஊழியம் வேறு ஒன்றுமில்லை. ஆகையால் உங்கள் வாழ்க் கையை சற்று சிந்தித்து பாருங்கள். நீங்களும் யூதர்களை போல சில குறிப்பிட்ட காரியங்களை மனதில் வைத்துக் கொண்டு,

- இப்படித் தான் ஊழியம் செய்ய வேண்டும்,
- இப்படித் தான் இயேசுவை பின்பற்ற வேண்டும்,
- இப்படித் தான் ஆவிக்குரிய ஜீவியத்தில் நடக்க வேண்டும் என்றெல்லாம் நினைக்கிறீர்களா? அல்லது இயேசுவின் அன்பை வெளிப்படுத்து கிறீர்களா? என்பதை சிந்தியுங்கள்.

யூதர்களை போல நாம் கட்டளைகளுக்கு பயந்து அன்பை கைவிட்டு விடுவோம் என்றால் பரலோக ராஜ்யத்தில் நாம் பிரவேசிக்க முடியாது. ஆவிக்குரிய சிந்தை நம்மில் காணப்பட வேண்டும்.

- ஆவிக்குரிய சிந்தை ஒரு மனுஷனையும் வெறுக்காது,
- எல்லோரையும் நேசிக்கும்.
- சட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காது. அன்பிற்கும், கிருபைக்கும் முக்கியத்துவம் கொடுக்கும்.

கிறிஸ்து நம்மில் பிழைத்திருக்கும் பொழுது இப்படிப்பட்ட உண்மையான அன்பின் உபதேசத்தின் பிள்ளைகளாக நாம் வாழ கற்றுக்கொள்ள வேண்டும். **கிறிஸ்துவுடனே கூடச் சிலுவையிலறையப்பட்டேன் ஆயினும், பிழைத்திருக்கிறேன் இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்**

**- கலாத்தியர் 2:20a**

## 2. பெரிதான ஆவிக்குரிய வல்லமை!

இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் நம்மோடு வாசம் செய்யும் தேவனாக இருந்தார். ஆகவே இம்மானுவேல் என்ற பெயர் அவருக்கு கொடுக்கப்பட்டது. தேவன் நம்மோடு இருக்கும் பொழுது நம்முடைய அனுபவங்கள் முற்றிலும் வேறுபட்டதாக இருக்கின்றது. இயேசுகிறிஸ்து நாத்தான் வேலிடத்திலே தேவ தூதர்கள் ஏறுகிறதையும், இறங்குகிறதையும் காண்பாய் என்று கூறுகிறார். அதற்கு அர்த்தம் என்ன? புதியதான ஆவிக்குரிய அனுபவங்களை நாத்தான்வேல் பெறப்போகிறான் என்பதே. தேவன் என்றாலே அவர் ஏதோ தொலைவில் இருந்து நம்மை கட்டுப்படுத்தும் சக்தி என்றே நம்மில் அநேகர் நினைக்கிறோம். ஆனால் அவர் இம்மானுவேல்! அவர் நம்மோடு இருக்கிறவர், நம்மைவிட்டு விலாகாதவர்! அவர் தூரத்திலிருந்து கொண்டு நம்மை பட்சிக்கும் அக்கினியாக இருப்பவர் அல்ல. நம்மை நேசித்து, நம்மை அரவணைத்து நம் மீது அன்பு செலுத்தும் தேவனாக இருக்கிறார்.

பிரியமானவர்களே! தேவனோடு நெருங்கி ஜீவிக்கும் ஒரு மகத்தான வல்லமையின் அனுபவத்தை இயேசு கிறிஸ்துவின் மூலமாக நாம் பெற்றுக் கொள்கிறோம். யூதர்கள் அறிந்தது எல்லாம் ஏனோக்கு, மோசே போன்றோர் தேவனோடு நடந்தார்கள், தேவனோடு சஞ்சரித்தார்கள் என்பதே. யூதர்கள் அறிந்ததை ஒரு நாளும் அனுபவித்து வாழ்ந்தது இல்லை. **இயேசுவோ தேவனோடு நெருங்கி ஜீவிப்பதற் கான ஒரு புதிய பாதையை, அனுபவத்தை அவர்களுக்கு காண்பித்தார், கற்றுக் கொடுத்தார், போதித்தார்.**

**தீர்க்கதரிசிகளும், ஆசாரியர்களும் சொன்னதை கேட்டு நடந்த யூதர்களுக்கு இப்போது காணப்பட்ட இயேசுவின் பிரசங்கம் முற்றிலும் வித்தியாசமாய் இருந்தது. அவருடைய போதகம்**

**அதிகாரம் உடையதாக இருந்தது (மத்தேயு 7:28,29).**

நானும் பிதாவும் ஒன்றாக இருக்கிறோம் என்று இயேசு பிரகடனம் பண்ணுகின்றார். **(யோவான் 14:8-10)** இப்படி பிதாவோடு ஒன்றித்து வாழும் அனுபவத்தை பற்றி இவர்கள் ஒருவரும் இதுவரை கேட்டதுமில்லை, பார்த்தது மில்லை. பிதாவோடு தான் ஒன்றாக இருப்பதின் அடையாளத்தை பலமுறை சீஷர்களிடத்திலே இயேசு காண்பித்தார். உதாரணமாக மறுரூப மலையிலே அவரோடுகூட மோசேயும், எலியாவும் காட்சி அளித்தார்கள். அதுமாத்திரமல்ல, வானத்திலிருந்து **"இவர் என்னுடைய நேசகுமாரன் இவருக்கு செவி கொடுங்கள்"** என்ற சத்தம் உண்டானது. **(லூக்கா 9:29-36)** இப்படி **வானத்திலிருந்து அடையாளத்தை பார்க்கப் போகும் ஒரு அனுபவத்தையே நாத்தான்வேல் பெறப்போகிறான் என்பதை இயேசு அங்கே சுட்டிக்காட்டுகிறார்.**

**இயேசுவானவர் தேவன் நம்மோடு இருக்கிறார் என்பதற்கு அடையாளமாகவே வாழ்ந்தார். இயேசுவினிடத்தில் காணப்பட்ட அன்பும், வல்லமையும் ஏற்கனவே இருந்த தீர்க்க தரிசிகளை காட்டிலும் மிகுந்த வித்தியாசமான தாகவும், வல்லமையுள்ளதாகவும் இருந்தது. (மத்தேயு 9:35; 15:30; 14:36)** தேவன் தூரத்திலிருந்து பார்த்து நம்மை தண்டிக்கும் தேவனாக இருக்கிறார் என்றே அறிந்தவர்களுக்கு, இயேசுவின் வாழ்க்கை, இயேசுவின் போதனை எல்லாம் ஒரு அரிதான, வல்லமையான செயலாக இருந்தது.

இயேசுவிடம் வரும் அனைவரும் நித்திய ஜீவனை பெற்றுக்கொள்வார்கள். மரித்தவர்களும் கூட அவர் சத்தத்தை கேட்டு எழுந்தார்கள். குஷ்டரோகிகள் சுகமானார்கள். குருடர்கள் பார்வையடைந்தார்கள். திமிர்வாதக் காரர்கள் நடந்தார்கள். **(யோவான் 3:16; 14:23)** இப்படி கணக்கில் அடங்காத அற்புதங்கள் இயேசுவை அன்பு கூறுகிறவர்கள் வாழ்விலும், விசுவாசிக்கிறவர்கள் வாழ்விலும் நடந்தது.

தேவனிடத்தில் முழுமையாக அன்பு கூறுகிறவர்களோடு தேவன் எப்போதும் வாசம் பண்ணுவார் என்பதை இயேசு தம்முடைய சீஷர்களுக்கு நிரூபித்து காண்பித்தார். இயேசுவோடு வாழ்ந்த ஒவ்வொரு நாளும் அவர்கள் கணக்கில் அடங்காத அற்புதங்களை பார்த்தனர், அனுபவித்தனர். சரீரப் பிரகாரமான சுகம். மரித்தோர் உயிரோடு எழும்புதல்; ஆன்மீக சுகம்! இதை எல்லாம் பார்த்து உண்மையாகவே நாத்தான்வேல் வியந்து இருப்பான். இதை எல்லாம் அறிந்து தான் இயேசு **"இதிலும் பெரிதானவைகளைக் காண்பாய்"** என்று கூறினார். அவர் மூலமாக செயல்பட்ட வல்லமை அவ்வளவு பெரிதானதாக இருந்தது. **சுகம், விடுதலை மாத்திரமல்ல, ஒன்றுமில்லாமை யிலிருந்து பெருக்கத்தையும் சீஷர்கள் பார்த்தனர், அனுபவித்தனர். மீனின் வாயில் காணப்பட்ட காசு, ஐந்து அப்பம், இரண்டு மீன்களை கொண்டு ஐயாயிரம் பேருக்கு உணவளித்தது என்று கணக்கில் அடங்காமல் அற்புதங்கள் நடந்துக் கொண்டே தான் இருந்தது. பிசாசுகளும் அவரை கண்ட மாத்திரத்தில் அலறி நடுங்கி ஓடின. நாத்தான்வேல் இவை அனைத்தையும் அந்த மூன்றரை வருடங்களில் அனுபவித்தது மாத்திர மல்ல இயேசுவை விசுவாசிக்கிறவனும் இதே போன்ற காரியங்களை செய்ய முடியும் என்பதையும் உணர்ந்து கொண்டான். ஆம்! நமக்கும் தேவன் இப்படிப்பட்ட வல்லமையை தந்து பெரிதான காரியங்களை நாமும் பார்க்கும்படியாக செய்ய முடியும்.**

## நம் வாழ்க்கையில் எப்படிப்பட்ட பெரிதான காரியங்களை நாம் பார்க்க முடியும்?

உலகத்தில் நாம் பார்க்கிற அனைத்திற்குமே ஒரு வரையறை உண்டு, எல்லை உண்டு. மனிதன் உண்டாக்கிய அனைத்திற்கும் எல்லை உண்டு. ஆனால் சர்வ வல்லமையுள்ள கர்த்தருக்கோ எல்லையே கிடையாது. அவர் நமக்கு காண்பிக்கும் வல்லமையை நாம் புரிந்துகொண்டு அதை அனுபவிக்க வேண்டும் என்றால் நாம் அவர் வல்லமையுள்ளவர் என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும். அவருடைய எல்லை இல்லாத வல்லமையை புரிந்துக்கொள்ள வேண்டும். இது தேவனால் முடியுமா என்ற கேள்வி நம்முடைய மனதிலே எழும்பக் கூடாது. அவர் சர்வ வல்லமை யுள்ளவர், சகலத்தையும் படைத்தவர், அவரால் செய்யக் கூடாதது ஒன்றுமில்லை என்று நீங்கள் விசுவாசிக்க வேண்டும். அதுமாத்திரமல்ல, **"அவரால் கூடாத காரியம் ஒன்றுமில்லை, அவர் சகலத்தையும் ஆளுகிறவர், சகலமும் அவருடைய கட்டு பாட்டிற்குள் இருக்கிறது"** என்பதையும் நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். அவருடைய

சிருஷ்டிப்பே இதற்கு ஒரு மிகப்பெரிய உதாரணம். **(ஏசாயா 40:12-18,26; எரேமியா 51:15,16; யோபு 38ம் அதிகாரம் முதல் 41ம் அதிகாரம் வரை)** இந்த வசனங்களை எல்லாம் அவருடைய சிருஷ்டிப்பின் மகிமையை நமக்கு எடுத்து காட்டுகிறது. ஆகவே எவ்வளவு சோர்வுகள் இருந்தாலும் அவரால் சகலமும் கூடும் என்பதை விசுவாசியுங்கள். ஒருவனை தாழ்த்தி மற்றொருவனை உயர்த்துகிறவர் அவர். அவரை கேள்வி கேட்க ஒருவராலும் கூடாது, அவரை தடுத்து நிறுத்தவும் முடியாது. உலகத்தில் வாழ்ந்த, வாழப் போகிற எல்லா மனிதர் களுக்கும், ராஜாக்களுக்கும், மேன்மை யானவர்களுக்கும், செல்வந்தர்களுக்கும் எல்லாருக்கும் மேலானவர் அவர். ஜீவனின் ஊற்றானவர் மரணத்தை ஜெயித்து, வெற்றி சிறந்தார். நீங்கள் பார்த்து கேட்டு இருக்கிற, அனுபவித்து இருக்கிற சகல சிருஷ்டிப்பு, வல்லமை, ஆளுகை, மிருகங்கள், நட்சத்திரங்கள், ராஜ்யங்கள் என அனைத்திற்கும் மேலானவர் தேவன். ஆகவே தான் **1யோவான் 4:4ல் "பிள்ளைகளே, நீங்கள் தேவனால் உண்டாயிருந்து, அவர்களை ஜெயித்தீர்கள்; ஏனெனில் உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர்"** என்று கூறுகிறார். அவர் பெரியவர். அவரிடமிருந்து நாம் பெரிதானவைகளை எதிர்பார்க்க முடியும். அவரோடு வாழும் பொழுது, அவரோடு கூட ஜீவிக்கும் பொழுது பெரிதானவைகளையே அவர் நமக்குக் காண்பிப்பார். ஒரு நாளும் அவர் மற்றவர்களுடைய எண்ணங்களின் படி நாம் தரம் தாழ்ந்து போக விடவேமாட்டார்.

உங்களுடைய ஆசைகள், கனவுகள் எல்லாவற்றை காட்டிலும் அவர் பெரிதான வற்றை உங்கள் வாழ்க்கையில் செய்ய முடியும். உங்கள் ஆசைகளுக்கும், விருப்பங்களுக்கும் ஏற்ப தேவனுடைய வல்லமையை குறுக்கி விடாதிருங்கள். **அதற்குக் கர்த்தர் மோசேயை நோக்கி: கர்த்தருடைய கை குறுகியிருக் கிறதோ? என் வார்த்தையின்படி நடக்குமோ நடவாதோ என்று, நீ இப்பொழுது காண்பாய் என்றார். (எண். 11:23)**

**ஆ, கர்த்தராகிய ஆண்டவரே, இதோ, தேவரீர் உம்முடைய மகா பலத்தினாலும், நீட்டப்பட்ட உம்முடைய புயத்தினாலும், வானத்தையும் பூமியையும் உண்டாக்கினீர். உம்மாலே செய்யக் கூடாத அதிசயமான காரியம் ஒன்றுமில்லை. (எரேமியா 32:17)**

**இதோ, நான் மாம்சமான யாவருக்கும் தேவனாகிய கர்த்தர். என்னாலே செய்யக் கூடாத அதிசயமான காரியம் ஒன்றுண்டோ? (எரேமியா 32:27)**

இயேசு இந்த உலகத்தில் வாழ்ந்த பொழுது சொன்னது போலவே நாம் அவரை விசுவாசிக்கும் பொழுது அவர் செய்த காரியங்களை நாமும் செய்ய முடியும், அதைக் காட்டிலும் பெரிய காரியங்களை செய்ய முடியும். ஏனென்றால் தேவனே மேலானவர், எல்லாரிலும் பெரியவர். அவரே உங்கள் குடும்ப வாழ்வில், உங்கள் ஊழியத்தில் பெரிதானவைகளைச் செய்து ஆசீர்வதிப்பாராக! ஆமென்.


விடுதலையின் ஆசீர்வாத ஆராதனை

ஞாயிறு தோறும்

காலை 9.30 மணி – 11.30 மணி

✓ அபிஷேகம் நிறைந்த பாடல்கள்
✓ அனல்மூட்டும் தேவ செய்தி
✓ உற்சாகப்படுத்தும் ஜெப நேரம்



ஜாதி, மத, இன வேறுபாடின்றி
அனைவரும் குடும்பமாக இவ்வாராதனையில்
பங்கு பெற அன்புடன் அழைக்கின்றோம்.

Live @ My Deliverance Church

டெலிவரன்ஸ் சர்ச், அன்பரின் ஊழிய ஜெப மையம்
10–வது குறுக்குத் தெரு, மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி–18.

Telugu Whats App No: 91770 87860

# விசுவாசம்

**விசுவாசத்தைப் பற்றி வேதத்தில் ஏராளமான வசனங்கள் இருக்கின்றது. அவற்றிலிருந்து ஒரு சில வசனங்கள்...**

## தினந்தோறும் இந்த வேத வசனங்களை ஆதாரமாக வைத்து ஜெபியுங்கள்

| | |
|---|---|
| செப்டம்பர் 1 | இயேசுவானவர் தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறவனேயன்றி உலகத்தை ஜெயிக்கிறவன் யார்? (1 யோவான் 5:5) |
| செப்டம்பர் 2 | அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லையென்று வேதம் சொல்லுகிறது. (ரோமர் 10:11) |
| செப்டம்பர் 3 | நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கிறோம். (2 கொரி. 5:6) |
| செப்டம்பர் 4 | இயேசு திரும்பி, அவளைப் பார்த்து: மகளே, திடன்கொள், உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார். அந்நேரம் முதல் அந்த ஸ்திரீ சொஸ்தமானாள். (மத். 9:22) |
| செப்டம்பர் 5 | விசுவாசத்தினாலே அவர்கள் ராஜ்யங்களை ஜெயித்தார்கள், நீதியை நடப்பித்தார்கள். வாக்குத்தத்தங்களைப் பெற்றார்கள். சிங்கங்களின் வாய்களை அடைத்தார்கள். (எபி. 11:33) |
| செப்டம்பர் 6 | இயேசு தோமாவே, நீ என்னைக் கண்டதினாலே விசுவாசித்தாய், காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள் என்றார். (யோவான் 20:29) |
| செப்டம்பர் 7 | ஸ்தேவான் விசுவாசத்தினாலும் வல்லமையினாலும் நிறைந்தவனாய் ஜனங்களுக்குள்ளே பெரிய அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்தான். (அப்போஸ். 6:8) |
| செப்டம்பர் 8 | தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழு நிச்சயமாய் நம்பி, தேவனை மகிமைப்படுத்தி, விசுவாசத்தில் வல்லவனானான். (ரோமர் 4:21) |
| செப்டம்பர் 9 | தன் விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான். (ஆபகூக் 2:4) |
| செப்டம்பர் 10 | விசுவாசித்தேன், ஆகையால் பேசினேன் என்று எழுதியிருக்கிறபடி, நாங்களும் அந்த விசுவாசத்தின் ஆவியை உடையவர்களாயிருந்து... பேசுகிறோம். (2கொரி. 4:13) |
| செப்டம்பர் 11 | பின்பு இயேசு நூற்றுக்கு அதிபதியை நோக்கி : நீ போகலாம், நீ விசுவாசித்த படியே உனக்கு ஆகக்கடவது என்றார். அந்த நாழிகையிலே அவன் வேலைக்காரன் சொஸ்தமானான். (மத்தேயு 8:13) |
| செப்டம்பர் 12 | விசுவாசித்தவளே பாக்கியவதி. (லூக்கா 1:45) |
| செப்டம்பர் 13 | விசுவாசத்திலே நிலைத்திருங்கள். (1 கொரி. 16:13-14) |

| | |
|---|---|
| செப்டம்பர் 14 | அவரைப் பற்றும் விசுவாசத்தால் அவருக்குள் நமக்குத் தைரியமும் திட நம்பிக்கையோடே தேவனிடத்தில் சேரும் சிலாக்கியமும் உண்டாயிருக்கிறது. (எபே. 3:12) |
| செப்டம்பர் 15 | ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது. (ரோமர் 4:3) |
| செப்டம்பர் 16 | நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய். (யோவான் 11:40) |
| செப்டம்பர் 17 | விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான். (மாற்கு 16:16) |
| செப்டம்பர் 18 | நீங்கள் ஜெபம்பண்ணும்போது எவைகளைக் கேட்டுக் கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள், அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும் என்று சொல்லுகிறேன். (மாற்கு 11:4) |
| செப்டம்பர் 19 | நானோ, ஜீவனுள்ளோர் தேசத்திலே கர்த்தருடைய நன்மையைக் காண்பேன் என்று விசுவாசியாதிருந்தால் கெட்டுப் போயிருப்பேன். (சங். 27:13) |
| செப்டம்பர் 20 | இயேசு அவர்களுடைய விசுவாசத்தைக் கண்டு, திமிர்வாதக்காரனை நோக்கி: மகனே, திடன்கொள், உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது என்றார். (மத். 9:2) |
| செப்டம்பர் 21 | நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துமூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம் (ரோமர் 5:1) |
| செப்டம்பர் 22 | கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; (எபே. 2:8) |
| செப்டம்பர் 23 | கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள். (அப்போஸ். 16:31) |
| செப்டம்பர் 24 | விசுவாசிக்கிறவன் பதறான். (ஏசாயா 28:16) |
| செப்டம்பர் 25 | இயேசு அவனை நோக்கி : நீ விசுவாசிக்கக்கூடுமானால் ஆகும், விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும் என்றார். (மாற்கு 9:23) |
| செப்டம்பர் 26 | நாமோ கெட்டுப்போகப் பின்வாங்குகிறவர்களாயிராமல், ஆத்துமா ஈடேற விசுவாசிக்கிறவர்களாயிருக்கிறோம். (எபிரெயர் 10:39) |
| செப்டம்பர் 27 | உங்கள் விசுவாசம் மனுஷருடைய ஞானத்திலல்ல, தேவனுடைய பெலத்தில் நிற்கும்படிக்கு, (1கொரி. 2:4) |
| செப்டம்பர் 28 | என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டென்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். (யோவான் 6:47) |
| செப்டம்பர் 29 | நம்மைச் சுற்றி நெருக்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்; (எபி. 12:1) |
| செப்டம்பர் 30 | நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். (2 தீமோ. 4:7) |

Trichy

# WE ARE HIRING



- **Accountant**
  **(B.com. / M.com. Graduates)**
  *Skills Required : Tally ERP 9*
- **Data Entry Operators**
  **(Any UG/PG Candidates)**
  *Skills Required : Good in computing skills*
- **Correspondence**
  **(Any UG/PG Candidates)**
  *Skills Required : Typing & computing skills (Tamil, English, Telugu)*
- **Social Media Executive**
  **(Any UG/PG Candidates)**
  *Skills Required : Good in social media platforms , Good in English & Tamil*
- **Video Editors**
  **(Any UG/PG Candidates)**
  *Skills Required : Able to work in Adobe Premiere Pro & After Effects*
- **Graphic Designers**
  **(Any UG/PG Candidates)**
  *Skills Required : Able to work in Adobe Photoshop & Illustrator*
- **Camera Man**
  **with adequate experience**
- **Drivers**
- **Cooks**
- **House Keepers**

- **Male / Female**
- **Christians Preferred**
- **Accommodation will be provided**
- **Apt Remuneration will be paid**

Apply to :

**info@mojindia.org**

# அன்பரின் ஆறுதல் டி.வி. நிகழ்ச்சி வாயிலாக என்னை சந்தித்த நல்ல மேய்ப்பன் இயேசு






எனக்கு இரண்டு ஆண் பிள்ளைகள் பிறந்தனர். இரண்டு பிள்ளைகளும் பிறந்ததிலிருந்தே வலிப்பு நோயால் மிகவும் கஷ்டப்பட்டனர். எத்தனையோ மருத்துவரிடம் சென்றும் வாழ்நாள் முழுவதும் அப்படித் தான் அவர்களுக்கு இருக்கும்,மருந்து எடுத்துக் கொண்டே இருக்க வேண்டும் என்று கூறிவிட்டனர். ஆகவே மிகுந்த துக்கத்தில் நான் இருந்தேன். குடும்பத்தில் மன நிம்மதி இல்லை. பிள்ளைகளை நினைத்து மிகவும் வருத்தப்பட்டு எங்கள் கஷ்டம் எப்பொழுது தீருமோ என்று துக்கத்தோடு இருந்தேன். நான் கிறிஸ்துவை அறியாத குடும்பத்தை சார்ந்தவன்.

ஒரு நாள் மிகுந்த கவலையோடு தொலைகாட்சியை பார்த்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது தமிழன் தொலைக்காட்சியில் Dr.ஜேன் ஜாஷ்வா அவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். இயேசுவின் வல்லமையை குறித்து முன்பின் அறியாத எனக்கு அவர்கள் கொடுத்த தேவசெய்தி என்னை மிகவும் தொட்டது. பரிசுத்த ஆவியானவர் எனக்குள் செயலாற்றினார். "காணாமல் போன ஆட்டை தேடி வருகிற இயேசுவின் அன்பை குறித்து பேசினார்கள்" அதைக் கேட்ட பொழுது என் இருதயம் நொறுங்குண்டது. இதுவரை இப்படிப்பட்ட அன்பை தெரியாமல் வாழ்ந்துவிட்டோமே, இந்த நல்ல மேய்ப்பர் என்னுடைய வாழ்க்கையில் அற்புதத்தை செய்வார் என்கிற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டது. ஜெப வேளையில் சகோதரியோடுகூட நானும் சேர்ந்து ஜெபித்தேன்.

இயேசுவே என் பிள்ளைகளை வலிப்பு நோயிலிருந்து காப்பாற்றும், இனி உமக்கு சாட்சியாக வாழ்கிறேன் என்று பொருத்தனை செய்தேன். மிகப் பெரிய அற்புதம் நடந்தது. அன்றிலிருந்து என் குழந்தைகளுக்கு வலிப்பு நோய் வரவே இல்லை. பத்து நாள் கழித்து மருத்துவரிடம் பிள்ளைகளை அழைத்து சென்றேன். மருத்துவர் என் பிள்ளைகளை பரிசோதித்து விட்டு உங்கள் பிள்ளைகளுக்கு வலிப்பு நோய்க்கு உரிய அறிகுறியே இல்லை, இனி அந்நோய் வராது என்றனர். இப்பொழுது பத்து ஆண்டுகளுக்கும் மேலாகிவிட்டது, வலிப்பு நோய் ஏற்படவே இல்லை. அனைத்து மருந்து, மாத்திரை எல்லாவற்றையும் நிறுத்திவிட்டோம். இயேசு கிறிஸ்து பரிபூரண சுகத்தை தந்தார். வலிப்பு நோயிலிருந்து அற்புதமாய் விடுதலையாக்கினார்.

இந்த சுகத்தை என் பிள்ளைகள் பெற்றதால் என் குடும்பத்தில் மிகுந்த நிம்மதியும், சந்தோஷமும் ஏற்பட்டது. இந்த மிகப் பெரிய அற்புதத்தை அனுபவித்த நான் இயேசுவை அறிந்து கொள்ள ஆசையோடு அருகில் இருந்த ஆலயத்திற்கு செல்ல ஆரம்பித்தேன். முழுமையாக இரட்சிப்பிற்குள் வந்தேன். அதுமாத்திரமல்ல, எங்கள் குடும்பத்தில் நடந்த இந்த அற்புதத்தை அறிந்த என்னுடைய நண்பர்கள், உறவினர்கள் என முப்பதுக்கும் அதிகமான பேர் இயேசுவை அறிந்து கொண்டனர். இந்த சாட்சி அநேகரை அசைத்தது. அவர்கள் இருதயங்களை இரட்சிப்பிற்கு நேராய் வழி நடத்தியுள்ளது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

**திரு.அய்யப்பன், நாகர்கோவில்.**

**✷ அன்பரின் ஆறுதல் ஒரு டி.வி. நிகழ்ச்சி வாயிலாக அநேக இலட்சக்கணக்கான ஆத்துமாக்கள் பயன் அடைகின்றனர் ✷ ஒரு மாதம் முழுவதும் வெளிவருகிற அனைத்து டி.வி. நிகழ்ச்சிகளும் ஒவ்வொரு விதமான மக்களை சென்றடைகிறது ✷ ஒவ்வொரு மாதமும் டி.வி. நிகழ்ச்சிகள் வெளிவர பல இலட்சங்கள் தேவைப்படுகிறது. ஆகவே இந்த பணத்தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள். நீங்களும் தாங்குங்கள்.**

## அன்பரின் ஆறுதல் டி.வி. நிகழ்ச்சி நேரங்கள்

நம்பிக்கை TELEVISION

புதன்
மதியம் 12.00 – 12.30

வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு
இரவு 8.30 – 9.00

தெலுங்கில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்

ARADANA TV
புதன், வியாழன், வெள்ளி
இரவு 7.00 – 7.30

மலையாளத்தில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்

HARVEST TV கேரளம்
சனி
இரவு 7.30 – 8.00



# Praise Report
# துதி அறிக்கை

## கட்டி மறைந்த அதிசயம்!



எனது பெயர் எஸ்தர் ராஜகுமாரி. எனது கணவர் பெயர் ஆபிரகாம். எங்களது சொந்த ஊர் பழனியை அடுத்த பொருளுர் கிராமமாகும். எனக்கு தைராய்டு கட்டி வந்து இதற்காக ஒட்டன்சத்திரம் கிறிஸ்தவ மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தேன். எனினும் எந்த ஒரு பயனும் இல்லை. கட்டி நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே இருந்தது. அறுவை சிகிச்சை செய்தாலும் உயிருக்கு ஆபத்தான நிலை. எனக்கு இரத்தம் குறைவாக இருப்பதால் அதற்குரிய மாத்திரை களை தந்து சில வாரங்கள் கழித்து வாருங்கள் என்று அனுப்பிவிட்டார்கள். அந்த சமயத்தில் பழனியில் ரோமன் கத்தோலிக்க ஆலய வளாகத்தில் நடந்த அற்புத சுகமளிக்கும் கூட்டத்தில் **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்கள் செய்தி கொடுப்பதற்காக அழைக்கப்பட்டிருந்தார்கள். அக்கூட்டத்திற்கு என்னுடைய மகன் என்னை அழைத்து வந்தான். கூட்ட முடிவில் சகோதரர் தனி ஜெபம் செய்யும் பொழுது என்னுடைய பரிதாப நிலையை உணர்ந்து கட்டியின் மேல் தனது கரங்களை வைத்தார். கரங்களை வைத்து **"இயேசுவே நீர் விசுவாசத்துடன் இந்த மலையை பார்த்து பெயர்ந்து போ"** என்று சொன்னால் அது அப்படியே ஆகும் என்று சொல்லி இருக்கிறீர். **விசுவாசத்தால் மலையே பெயர்ந்து போகும் பொழுது இந்த தைராய்டு கட்டி உமக்கு முன்பாக ஒன்றுமில்லை என்று இயேசுவின் நாமத்தில் கட்டியை இந்த இரவே மறைந்து போ என்று கூறினார். என்ன ஆச்சரியம்! மறு நாள் நான் அந்த கட்டியை தேடியும் அந்த இடத்தில் ஒரு சின்ன தழும்பு கூட இல்லாமல் அந்த பெரிய கட்டி மறைந்திருந்தது.** இப்பொழுது சகோதரனுடைய கூட்டங் களுக்கு உதவி செய்கிற என் மகன் பாஸ்டர் செல்வகுமார் அதைப் பார்த்து மிகவும் ஆச்சரியப்பட்டான். இயேசுவின் மீதிருந்த நம்பிக்கை இன்னும் பெருகிற்று. குடும்பமே சந்தோஷம் அடைந்தோம். கர்த்தர் செய்த அற்புதத்திற்காக தேவனை துதிக்கின்றேன்.

**- திருமதி எஸ்தர் ராஜகுமாரி, ஒட்டன்சத்திரம்**

## பொருத்தனை ஜெபத்திற்கு பதில் தந்த கர்த்தர்



2017-ம் ஆண்டு நாகர்கோவிலில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டேன். எனக்கு இராணுவத்தில் வேலை கிடைத்தால் ஒரு மாத சம்பளத்தை காணிக்கையாக தருவதாக பொருத்தனையோடு ஜெபித்து சென்றேன். **அதே ஆண்டு தேவ கிருபையால் எனக்கு இராணுவத்தில் வேலை கிடைத்தது. தற்பொழுது விடுமுறையில் ஊருக்கு வந்தவுடன் என்னுடைய ஒரு மாத சம்பளம் Rs.25,000/-த்தை அன்பரின் ஊழியத்திற்கு காணிக்கையாக தருகின்றேன்.**

**- சகோ. அஜய், கன்னியாகுமரி**

## பங்காளர் வாழ்வில் கர்த்தர் செய்த அற்புதம்



எனது பெயர் ராதா. நான் தற்போது திருப்பூரில் வசித்து வருகின்றேன். சுமார் 23 ஆண்டுகளுக்கு முன்பு எனது சொந்த ஊரான சேலம் பகுதியில் வசித்து வரும்பொழுது எனக்கு திருமணம் நிச்சயமானது. ஆனாலும் திருமண தேவைகளுக்கு பணமில்லாமல் என் பெற்றோரும் நானும் மிகவும் கலங்கிப்போய் இருந்தோம். இந்நிலையில் **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்களின் குடும்ப ஆசீர்வாதக் கூட்டம் சேலத்தில் நடந்தது. மனச்சோர்வுடன் கூட்டத்தில் கலந்துக் கொண்டேன். கூட்ட முடிவில் சகோதரர் அவர்கள் எனது இக்கட்டான நிலையை கேட்டறிந்து எனக்காக மனதுருகி ஜெபித்தார்கள். ஜெபம் முடிந்து, என்னைப் பார்த்து, **"கலங்காதே மகளே! கர்த்தர் உன் திருமண தேவைக்குரிய பணம் Rs.5,00,000/- த்தை சந்திப்பார் என கூறினார்கள். இதைக் கேட்டு மகிழ்ந்தாலும், என மனதிற்குள் ஒருவித சந்தேகத்துடன் வீடு திரும்பினேன். ஒருசில நாளில் நாங்கள் சற்றும் எதிர்பார்க்காத வண்ணம் சகோதரர் தீர்க்கதரிசனமாக கூறினது போலவே Rs.5,00,000/- கிடைக்கும்படி கர்த்தர் அற்புதம் செய்தார். திருமண காரியமும் நல்லபடியாக நடந்து முடிந்தது. அதன்பிறகு நான் திருப்பூர் பகுதியில் என் கணவருடன் வாழ்ந்து வந்தேன். அப்பொழுது சகோதரருடைய ஊழியத்தை மறவாமல் காணிக்கை கொடுக்க ஆரம்பித்தேன். இதனிமித்தம் கர்த்தர் எனது தொழிலில் பெரிதான ஆசீர்வாதத்தை அருளிச் செய்தார். மேலும், ஐம்பது லட்சத்தில் (Rs.50,00,000/-) நல்ல வீட்டை கட்டும்படியும் கர்த்தர் அதிசயம் செய்தார். அதற்காக கர்த்தரை மனதார துதிக்கிறேன்.** திருப்பூரில் தேவனுடைய மக்களின் எழுப்புதலுக்காக அன்பரின் ஊழியத்தின் மூலமாக ஒரு கூட்டம் ஏற்பாடாகி இருந்தது. அதன் செலவு முழுவதும் அன்பரின் ஊழியத்தில் மிகவும் வாஞ்சை உள்ள ஜெப வீரர்களாகிய நாம் தான் சந்திக்க வேண்டும் என்று உணர்ந்தேன். எனவே இந்த குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்திற்கு என்னால் இயன்ற காணிக்கையை செலுத்துகிறேன். மற்றும் ஒவ்வொரு மாதமும் என் வருமானத்தில் ஊழியத்திற்கு கொடுத்து என்னால் இயன்ற அளவு தொடர்ந்து தாங்குகின்றேன்.

**- திருமதி. ராதா, திருப்பூர்**

## குழந்தை பாக்கியம் அருளின அற்புதத்தின் தேவன்!



எனக்கு 2011ஆம் ஆண்டில் திருமணமானது. அந்த ஆண்டின் இறுதியில் நான் கர்ப்பம் தரித்தேன். எனினும் கரு கலைந்துவிட்டது. இரண்டாவது முறையும் அப்படியே ஆகிவிட்டது. இதனால் நான் மனஉளைச்சலுக்கு ஆளாகினேன். இந்நிலையில் எனது பாட்டி ஜெய்லா அவர்கள் மூலம் **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டேன். அங்கிள் எனக்காக அதிக ஊக்கமாக ஜெபித்தார்கள். கர்த்தர் ஜெபத்தை கேட்டு 2014ம் ஆண்டு அழகான பெண் குழந்தை பெற்றெடுக்கும்படி கிருபை செய்தார். தொடர்ந்து 2015ம் ஆண்டு ஆண் குழந்தையும் எனக்கு பிறந்தது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! இந்நிலையில் 2018ஆம் ஆண்டு சரீர பிரச்சனை எனக்கு ஏற்பட்டது. தொண்டை வலி, உடல் முழுவதும் வலி, அடிக்கடி வாந்தி எடுத்துக் கொண்டே இருந்தேன். காரணம் என்னவென்று தெரியவில்லை. ஒருவித பயமும் என்னை ஆட்கொண்டிருந்தது. மருத்துவர்களிடம் காண்பித்து பரிசோதனை செய்து பார்த்ததில் ஒரு பிரச்சனையும் இல்லை எனக் கூறி விட்டனர். தொடர்ந்து வேதனைபட்டுக் கொண்டே இருந்தேன். இந்நிலையில் திருநெல்வேலியில் நடைபெற்ற அற்புத குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்தில் கலந்துகொண்டு அங்கிள் அவர்களிடம் என் நிலையைத் தெரிவித்து ஜெபிக்கும்படி சொன்னேன். கர்த்தர் அந்த நாளில் அற்புத விடுதலையை கொடுத்தார். எனது உடல் வலி, தொண்டை வலி நீங்கி பரிபூரண சுகம் பெற்றேன். எனக்கிருந்த பயத்தையும் கர்த்தர் எடுத்துப்போட்டார். அற்புதம் செய்த தேவனுக்கு கோடா கோடி ஸ்தோத்திரம்!

**- திருமதி ஆர்த்திகா, தூத்துக்குடி**

## நிரந்தர வேலை கிடைத்தது!



எனது சிறு வயதில் +2 முடித்து மேற்கொண்டு என்ன செய்வது எனத் தெரியாமல் கலங்கிக் கொண்டிருந்தேன். அந்த சமயத்தில் **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்கள் எங்கள் பகுதிக்கு வந்திருந்தார்கள். கூட்டத்தில் கலந்துகொண்டு எனது எதிர்காலத்திற்காக சகோதரர் அவர்களிடம் ஜெபிக்கும்படி கேட்டேன். சகோதரர் எனக்காக ஜெபித்தார்கள். கர்த்தர் ஜெபத்தை கேட்டு என்னை ஆசீர்வதித்தார். ஆசிரியர் பயிற்சியில் சேர கர்த்தர் வழி வாசலை திறந்தார். ஆசிரியருக்குள்ள தகுதியை வளர்த்துக் கொண்டேன். தூத்துக்குடியில் பல பள்ளிகளில் பணிபுரிந்தேன். பணி நிரந்தரத்திற்காக காத்திருந்தேன். சுமார் ஐந்து ஆண்டுகளுக்கு பிறகு தூத்துக்குடி மாவட்டம் குளத்தூரில் உள்ள ஒரு பள்ளியில் பணி நிரந்தரமாகும்படி கர்த்தர் கிருபை செய்தார். கர்த்தர் செய்த அற்புதத்திற்காக அவரை துதிக்கிறேன்.

**- திருமதி. பெத்தரசி, தூத்துக்குடி**

## இழந்த வேலை மீண்டும் கிடைத்தது!



2020ஆம் ஆண்டு கொரோனா காலத்தில் துபாயில் வேலை பார்த்து வந்த என் கணவர் திடீரென அவர் செய்த வேலையை இழக்க நேரிட்டது. இதனால் எங்கள் குடும்பம் மிகவும் கஷ்டப்பட்டு வந்தது. என்ன செய்வதென்று தெரியாமல் கலங்கி, கண்ணீரோடு காணப்பட்டோம். இந்நிலையில் **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்கள் கூட்டத்தில் கலந்துக் கொண்டேன். சகோதரர் எங்களுக்காக ஜெபித்தார்கள். கர்த்தர் ஜெபத்தை கேட்டு ஒருசில மாதத்தில் மீண்டும் அதே நிறுவனத்தில் பணியில் சேரும்படி உதவி செய்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

**- திருமதி. ஷீலா, சுசீந்திரம்**

## தீர்க்கதரிசனத்தின்படி 30 லட்சம் மதிப்பில் வீடு கட்டினோம்!

சுமார் 7 ஆண்டுகளுக்கு முன்பு எனக்கு சொந்தமாக வீடு கிடையாது. அந்த நிலையில் நாகர்கோவிலில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்களிடம் ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டேன். சகோதரர் **"30 லட்சம் மதிக்கத்தக்க வீட்டை கர்த்தர் உங்களுக்குத் தருகிறார்"** என்று தீர்க்கதரிசனமாக கூறினார்கள். சொல்லி ஆறு மாதங்களுக்கு உள்ளாகவே எனது பூர்வீக சொத்து கிடைத்தது. சொன்ன வார்த்தையின்படியே 30 லட்சம் ரூபாய் மதிப்பில் அழகிய வீடு கட்ட கர்த்தர் இரக்கம் பாராட்டினார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

அதுமாத்திரமல்ல, 2020ஆம் ஆண்டு எனது கணவர் சவுதி அரேபியாவில் வேலை பார்த்து வந்தார். அவர்கள் அந்த வேலையை இழக்க நேரிட்டது. எனவே இந்தியா திரும்பி விட்டார். இதனால் மிகுந்த வேதனைப்பட்டார்கள். நாகர்கோவிலில் நடைபெற்ற தனி ஜெப நாளில் **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்களை சந்தித்தோம். ஐயா என்னை பார்த்து **"ஏன் அழுகிறாய்"** என்று கேட்டு எங்களுக்காக பாரத்துடன் ஜெபித்து **"கர்த்தர் மறுபடியும் உங்களை உயர்த்துவார், இழந்த வேலையை மீண்டும் தருவார், விசா வரும்"** என்று நம்பிக்கையோடு கூறினார்கள். அதன்பிறகு மூன்று மாதம் காத்திருந்தோம். 2022 பிப்ரவரி 2ஆம் தேதி சவுதிஅரேபியாவில் உள்ள அதே நிறுவனத்தில் மீண்டும் வேலைக்கு சேருமாறு எனது கணவருக்கு அழைப்பு வந்தது. எங்கள் கண்ணீரை கண்ட தேவனுக்கு ஸ்தோத்திரம்!

**- திருமதி. ஷீபா, நாகர்கோவில்**

## நீ அழ வேண்டாம்



என் பெயர் ஜாய்ஸ் மேரி. எனக்கு இரண்டு மகள்கள். 2016-ம் ஆண்டு மூத்த மகளை B.Sc நர்சிங் படிக்க வைப்பதற்காக ஒரு கல்லூரியில் முயற்சி செய்தேன். அதற்கு முன் அன்பரின் ஊழியத்திற்கு சிறு காணிக்கை அனுப்பிவிட்டு என் மகளுடைய **admission** - க்காக கல்லூரிக்கு சென்றேன். அங்கிருந்த மேனேஜர், கவுன்சிலிங் எல்லாம் முடிந்துவிட்டது என கூறி, என்னை திட்டி வெளியே அனுப்பிவிட்டார்.

வெளியே வந்த நான் ஒரு மரத்தடியில் நின்று அழுதுக் கொண்டிருந்தேன். அப்பொழுது என்னை யாரோ ஒருவர் தொட்டது மாதிரி தெரிந்தவுடன் திரும்பிப் பார்த்தேன். ஒருவரும் இல்லை. சிறிது நேரத்தில் நான் நிற்கிற இடத்திலிருந்து வெகு தொலைவில் வெள்ளையங்கி தரித்த ஒருவர் நிற்பதை பார்த்தேன். அவரிடமிருந்து ஒரு குரல் வந்தது. **"நீ அழவேண்டாம்"** உன்னை இப்பொழுது அழைத்து மகளுடைய சான்றிதழை கொடுத்துவிடுவார்கள். அதன்பின் நீ வேறு கல்லூரிக்கு செல்! என்ற சத்தத்தைக் கேட்டேன். சிறிது நேரத்தில் என்னை அழைத்து என் மகளுடைய சான்றிதழை கொடுத்துவிட்டார்கள். அதன்பின் என் மகளுக்கு இன்னொரு கல்லூரியில் சேர்ந்து படிப்பதற்கான இடம் கிடைத்தது. மகள் நர்சிஸ் படித்து முடிக்கவும், அதன்பின் ஒரு மருத்துவமனையில் வேலை பார்க்கவும் கர்த்தர் உதவி செய்தார். ஜனவரி மாதம் நாகர்கோவிலில் நடைபெற்ற கூட்டத்திற்கு வந்து, மகளுக்கு நல்ல வேலை கிடைக்க ஜெபிக்கும்படி சகோதரர் **ஆனந்த ஸ்திரா** அவர்களிடம் கேட்டுக்கொண்டேன். சகோதரரும் பாரத்துடன் ஜெபித்து அனுப்பினார்கள். பிப்ரவரி மாதமே மகளுக்கு விசா கிடைத்து, சவுதி செல்ல கர்த்தர் இரங்கினார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். இம்மட்டும் நேர்த்தியாக நடத்திய கர்த்தரை துதிக்கிறேன்.

**- திருமதி. ஜாய்ஸ் மேரி, நாகர்கோவில்.**


விஜயவாடாவில்

அற்புத குடும்ப ஆசீர்வாதக் கூட்டம்

செப்டம்பர் 17 சனிக்கிழமை

இடம் : ஹோட்டல் அயிலாபுரம்,
கன்வென்ஷன் ஹால்,
இரயில்வே ஸ்டேஷன் ரோடு,
காந்தி நகர், விஜயவாடா.

நேரம் : காலை 10.00 மணி முதல்
மதியம் 2.00 மணி வரை

தேவ செய்தி: Dr. ஆனந்த ஸ்திரா

தொடர்புக்கு: 91770 87860, 95509 15237 & 99944 82791

அற்புத குடும்ப ஆசீர்வாதக் கூட்டம்

நாகர்கோவிலில்

அக்டோபர் 4
(செவ்வாய்கிழமை
அரசு விடுமுறை)

இடம் : விஜயதா திருமண மண்டபம்,
W.C.C. ரோடு, நாகர்கோவில்

தொடர்புக்கு
0431 – 2765386, 82203 17472



Dr. ஆனந்த ஸ்திரா
Mrs. மார்கிரேட் ஸ்திரா

நேரம் : காலை 9.30 மணி முதல் 1.00 மணி வரை

திருநெல்வேலியில்

அக்டோபர் 5
(புதன்கிழமை
அரசு விடுமுறை)

இடம் : செல்வி மஹால்,
காளிமார்க் பஸ் ஸ்டாப் அருகில்,
முருகன்குறிச்சி, பாளையங்கோட்டை.

தொடர்புக்கு: 0431 – 2765386,
81482 37037

dranandastira@mojindia.org, margret@mojindia.org,
joshua@mojindia.org, jane@mojindia.org,
info@mojindia.org

# தற்கொலை செய்யத்தூண்டும் ஆவிகளை இயேசுகிறிஸ்துவின் வல்லமையுள்ள நாமத்தினால் அழிப்பதற்கான

# விசேஷித்த ஜெபம்!

ஜெபம் ஏறெடுப்பவர் : Dr. ஆனந்த ஸ்திரா

**நான் துன்பத்தின் நடுவில் நடந்தாலும் நீர் என்னை உயிர்ப்பிப்பீர்; என் சத்துருக்களின் கோபத்துக்கு விரோதமாக உமது கையை நீட்டுவீர்; உமது வலதுகரம் என்னை இரட்சிக்கும். கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார்; கர்த்தாவே, உமது கிருபை என்றுமுள்ளது; உமது கரத்தின் கிரியைகளை நெகிழவிடாதிருப்பீராக. சங்.138:7-8. (தானியேல் 4:17,25,34. நீதிமொழிகள் 23: 17,18. 1சாமுவேல் 2: 8)**

சர்வ வல்லமையுள்ள எங்கள் தேவனே அகிலத்தையும், வான மண்டலங்களையும் சிருஷ்டித்து, அனைத்தையும் உம்முடைய மகத்துவமுள்ள நாமத்தினால் ஆளுகிறவரே உமக்கு ஸ்தோத்திரம்.

பரலோகத்தில் வாசம் செய்யும் எங்கள் பரமதந்தையே, உம்மைத் துதிக்கிறோம். சகல விதமான பிசாசின் கிரியைகளை அழிக்கக் தக்கதாக உமது திருக்குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை இந்த பூமிக்கு அனுப்பினதற்காக உமக்கு ஸ்தோத்திரம்.

அப்பா பிதாவே! இப்போதும் எங்கள் பிள்ளைகள் மத்தியில் ஒரு தன்னம்பிக்கையை தாரும். வாழ்வின் அனைத்து சூழ்நிலையையும் தைரியத்தோடு எதிர்கொள்ள மனதெளிவை அவர்களுக்கு தாரும். என்ன நடந்தாலும் இயேசுவாகிய நீர் கைவிட மாட்டீர் என்பதை ஆணித்தரமாய் நம்பும்படி உதவி செய்யும்.

ஆம்! தந்தையே, உலகில் இயேசு வாழ்ந்த நாட்கள் எல்லாம் பலவகையான பேய்களும் பிசாசுகளும், இயேசுவை பார்த்த மாத்திரத்தில் அலறின. இயேசு கட்டளையிட அந்த ஆவிகள் பாடுபடுகிற மக்களை விட்டு ஓடினது!

கர்த்தாவே, உலகின் கடைசிகாலத்தில் வாழ்ந்துக்கொண்டு இருக்கிறோம். இந்த கடைசி காலம் நோவா, லோத் காலத்தைபோல இருக்கும் என்று கூறினீர். துன்பங்களும், துயரங்களும், எதிர்பாராத அதிர்ச்சியூட்டும் செய்திகளும் நாங்கள் கேட்க வேண்டியுள்ளது. மனிதர்களுக்குள் இருக்க வேண்டிய சமாதானம் எடுபட்டு போயிற்று!

விசேஷமாக தற்கொலை வாழ்வின் முடிவல்ல என்பதை அனைவரும் புரிந்துக் கொள்ள செய்யும். எங்கள் தேசத்தில், எங்கள் எல்லைகளில் தற்கொலைகளின் எண்ணிக்கை இல்லாமல் போவதாக!

கர்த்தாவே, இந்த ஜெபத்தை கேட்டு உம் பிள்ளைகள் தற்கொலை செய்யாதபடிக்கு தடுத்து நிறுத்தி பாதுகாத்துக் கொள்ளும். அவர்களுக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது என்பதை புரிந்து கொள்ள செய்யும். அவர்கள் நினைத்தபடி எல்லாம் தீர்மானம் பண்ணாமல், உம்முடைய சிறந்த திட்டத்தின்படியே அவர்களை உயர்த்த முடியும் என்பதை உணர செய்யும். மனச் சோர்வுகளை எடுத்துப்போடும். ஆசீர்வதியும் இயேசுவின் நாமத்தில் வேண்டிக்கொள்கிறோம் பரிசுத்த பிதாவே! ஆமென்!

**தானியேல் 4:17,25,34**
**சங்கீதம் 138: 7,8**
**நீதிமொழிகள் 23: 17,18**
**1 சாமுவேல் 2: 8**

பிசாசின் கிரியைகளாகிய செய்வினை, மாந்திரீகம், பில்லிசூன்யம், ஏவல் ஆவிகள், குறிசொல்லும் ஆவிகள், வானமண்டலத்தில் தீங்கு செய்யும் ஆவிகள், இப்பிரபஞ்சத்தின் பொல்லாத ஆவிகள், தள்ளப்பட்ட தூதர்கள் மற்றும்

அவைகளின் தலைவனாகிய அப்பொல்லியோனால் பல அன்புப்பிள்ளைகள் அதிகமாக பாடு படுகின்றார்கள். நம் தேசத்தில் எங்கும் தற்கொலை ஆவி பல குடும்பங்களில் குறிப்பாக வாலிப பிள்ளைகள் மத்தியில் தாண்டவம் ஆடுகிறது. இதை நினைத்து அனுதினமும் நாங்கள் அனைவரும் அதிக வேதனைப்படுகிறோம்.

நான் என் சிறுவயதில் சுமார் 17 ஆண்டுகள் பலவிதமான தற்கொலை முயற்சிகளை மேற் கொண்டேன். பொட்டாசியம் சைனைட் அருந்திய பொழுதும், பல தற்கொலை முயற்சிகளை மேற்கொண்ட போதும் கர்த்தர் என்னை அற்புதமாக காப்பாற்றினார்.

இயேசு தாமே என்னுடைய கடைசி தற்கொலை முயற்சியையும் முறியடித்தார். வாழ்க்கையில் ஒரு மகத்துவமான திட்டத்தை வெளிப்படுத்தி சோதனை மத்தியில் இடறல்கள் மத்தியில் பலவிதமான இழி சொல் மத்தியில் பரியாசம் எதிர்ப்புகள் மத்தியில் என்னை உற்சாகப்படுத்தி அநேக அற்புதங்களை செய்து என்னை இந்த நிலைமைக்கு உயர்த்தினது போல கர்த்தர் உங்களையும் உயர்த்துவார். ஆகவே தற்கொலை செய்யாதீர்கள்.

ஏற்கனவே தற்கொலை செய்து பாதாளத்திற்கு சென்ற ஆவிகளை பொல்லாத சத்துருவாகிய அப்பொல்லியோன் பூமிக்கு அனுப்பி, ஆயிரக்கணக்கான பரிசுத்த சுபாவமுள்ள, கபடம் இல்லாத மக்களை தற்கொலை செய்ய தூண்டு கிறான். அந்த தற்கொலை ஆவிகளை இயேசுவின் நாமத்தில் சபிக்கிறேன்.

என் அன்பு வாசகர்களே! மனச்சோர்வுள்ள பிள்ளைகள் உங்கள் இல்லங்களில் இருந்தால் தயவு செய்து நம்முடைய திருச்சி அன்பரின் ஊழியம் ஜெப ஸ்தலத்தில் மாதந்தோறும் கடைசி சனிக்கிழமை களில் நடைபெறுகிற குடும்ப ஆசீர்வாத கூட்டங் களுக்கு அழைத்து வாருங்கள். கூட்டம் முடிந்து நானும் என் குடும்பத்தினரும், உங்களை தனித் தனியாக சந்தித்து, உங்கள் அனைத்து காரியங்களுக்காகவும் ஜெபம் செய்வோம்.



# WORLD NEWS உலகச் செய்திகள்

## மனித கடத்தல் (Human Trafficking)

- சர்வதேசதொழிலாளர் அமைப்பின் கணக்கெடுப்பின்படி உலகத்தில் 40.3 மில்லியன் (4.03 கோடி) மக்கள் நவீனகால அடிமைத்தனத்தில் இருக்கிறார்கள். இதில் 24.9 மில்லியன் மக்கள் வேலைக்காக கடத்தப்பட்டு அடிமைகளாக வைக்கப்படுகிறார்கள்.
- 15.4 மில்லியன் மக்கள் கட்டாய திருமணங்களுக்காக கடத்தப்பட்டு அடிமைகளாய் வைக்கப்படுகிறார்கள்.
- இதில் 71 சதவிகிதம் பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகள் ஆவார்கள். 29 சதவிகிதம் ஆண்கள் மற்றும் சிறுவர்கள்.
- 18 வயதுக்கு கீழ்ப்பட்ட குழந்தைகள் 10.1 மில்லியன் பிள்ளைகள் இப்படி கடத்தப்பட்டு அடிமைகளாய் இருக்கிறார்கள்.
- கடத்தப்பட்டு அடிமைகளாய் கட்டாயப்படுத்தி திருமணத்தில் ஈடுபடுத்தப் படுகிறவர்களில் 37 சதவிகிதம் பெண் பிள்ளைகளாய் இருக்கிறார்கள்.
- பாலியல் தொழிலில் அடிமைப்படுத்தப்படுகிறவர்கள் 27 சதவிகிதம் பெண் பிள்ளை களாய் இருக்கிறார்கள்.
- கடத்தப்படுகிற மக்களில் 20 சதவிகிதம் மக்கள் பாலியல் துன்புறுத்தலுக்கு ஈடுபடுத்தப்படுகின்றனர்.
- இந்தியாவிலேயும் இப்படிகடத்தப்பட்டு அடிமைப்படுத்தப்படும் தொழில் ஆங்காங்கே நடந்து கொண்டு தான் இருக்கின்றது.
- இந்தியாவிலுள்ள 20 மில்லியன் பாலியல் தொழில் செய்யும் பெண்களில் 16 மில்லியன் பெண்களும், சிறுபெண் பிள்ளைகளும் கடத்தப்பட்டு அடிமைகளாய் வைக்கப் படுகிறார்கள் என்று Reuter செய்தி நிறுவனம் கணக்கெடுப்பில் கூறுகிறது. இதில் அநேகர் பாலியல் தொழிலுக்கும், பிச்சை எடுப்பதற்கும், வெளிநாடுகளில் அடிமை வேலை செய்வதற்கும் விற்கப்படுகின்றனர்.
- அநேக பிள்ளைகள் தங்களுடைய சொந்த குடும்பத்தினரால் அல்லது குடும்ப நண்பர்களால் விற்கப்படுகின்றவர்களாய் இருக்கின்றனர்.
- இந்த கொடுமையான தொழில் நம் நாட்டை விட்டும், உலகைவிட்டும் நீங்கவேண்டும். இதை தடுக்கும் அளவிற்கு நாம் விழிப்புணர்வு உள்ளவர்களாய் இருப்போம்.



# S J SAVES TRUST

# நலிந்தோரின் நல்வாழ்வு அறக்கட்டளை

- **பசியுள்ளவனுக்கு உன் ஆகாரத்தைப் பகிர்ந்து கொடுக்கிறதும், துரத்துண்ட சிறுமையான வர்களை வீட்டிலே சேர்த்துக் கொள்ளுகிறதும், வஸ்திரமில்லாதவனைக் கண்டால் அவனுக்கு வஸ்திரங்கொடுக்கிறதும், உன் மாம்சமானவனுக்கு உன்னை ஒளிக்காம லிருக்கிறதும் அல்லவோ எனக்கு உகந்த உபவாசம் - ஏசாயா 58 : 7**
- **அவர் திக்கற்றபிள்ளைக்கும் விதவைக்கும் நியாயஞ்செய்கிறவரும், அந்நியன்மேல் அன்பு வைத்து அவனுக்கு அன்னவஸ்திரம் கொடுக்கிறவருமாய் இருக்கிறார். உபாகமம் 10:18**

*கிறிஸ்துவுக்குள் எனக்கன்பான தேவபிள்ளைகளே!*

*ஏழைகளை நேசிக்கும் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் பரிசுத்த நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன்.* **மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது. மத்தேயு5:16-ன்படி** *கர்த்தர்* **S J Saves Trust** *மூலமாக பலநற்கிரியைகளை செய்ய தொடர்ந்து உதவி செய்து வருகிறார். அதற்காக கர்த்தரை ஸ்தோத்தரிப்போம். இந்த பணிகள் இன்னும் விரிவடைய ஜெபியுங்கள்.*

## S J Saves Trust மூலம் செய்யப்பட்ட உதவிகள்

- ★ **உங்கள் ஜெபத்தினாலும், உதவியினாலும் கடந்தமாதம் 11 ஏழை விதவைகளுக்கு அவர்களின் வாழ்வாதாரத்திற்காக பெண் வெள்ளாடுகள் கொடுக்கப்பட்டது.**
- ★ **அத்துடன் 100 மாணவ மாணவிகளுக்கு நல்ல உணவும், மருந்துகளும், படிப்பிற்கு தேவையான நோட்புக், பென்சில், பேனா, School bag, Geometry box, ஏனைய அத்தியாவசிய பொருள்கள் கொடுக்கப்பட்டது.**
- ★ **நம்மிடம் பலவருடமாக படித்துக் கொண்டிருக்கும் 1100 பிள்ளைகளில் தற்போது 400 பிள்ளைகளுக்கு மாத்திரமே ட்யூசன் ஆரம்பித்துள்ளோம். பிள்ளைகள் நமது ட்யூசன் சென்டருக்கு உற்சாகமாய் வருகிறார்கள். அவர்களுக்கு இரவு சாப்பாடு, காலை டிபன் கொடுக்கிறோம். நல்ல ஆசிரியர்களை கொண்டு பாடங்களை கற்பித்து வருகிறோம்.**

## S J Saves Trust -ன் பொருளாதார தேவைகள்

**100 பிள்ளைகளுக்கு நல்லஉணவு, மருந்து, இனிப்பு மற்றும் அடிப்படை தேவைகளுக்கு உரியவைகளைக் கொடுக்க ரூ.15,000/-** *தேவைப்படுகிறது.* **(200 பிள்ளைகளுக்கு ரூ.30,000/- 400 பிள்ளைகளுக்கு ரூ.60,000/- செலவாகிறது)** *இவைகளை உங்கள் பிறந்த நாளின் பொழுதோ, திருமணநாளின் பொழுதோ அல்லது உங்கள் பிள்ளைகள், பேரப் பிள்ளைகளின் பிறந்தநாளில் இந்த ஏழை பிள்ளைகளை நினைத்து உங்கள் சார்பில் அவர்களுக்கு உதவி செய்யலாம்.*

கடந்த இதழில் தெரிவித்தபடி கணவரை இழந்த பெண் கீதா என்பவருக்கு அவசரமாக பாதுகாப்பான ஒரு வீடு கட்டி தர வேண்டும். எளியமுறையில் ஒரு வீடுகட்ட இரண்டு லட்சம் முதல் மூன்று லட்சம் வரை செலவுகள் ஆகும். **(Rs.2,00,000/- to 3,00,000/-)** மேலும் வீடின்றி, குடிசையில் வாழும் மூன்று பெண்களுக்கு இது போன்ற வீடு கட்டி தரவேண்டும். நான்கு வீடுகள் கட்ட மொத்தம் **Rs.10,00,000/- (Ten lakhs only)** இப்பணிகளுக்கு உங்களால் முடிந்த உதவிகளை செய்யும்படி கேட்டுக் கொள்கிறோம். இந்த பணிக்கு உதவுகின்ற மக்களை தேவன் தாமே நிச்சயமாக ஆசீர்வதிப்பார்.

**இத்துடன் ஆதரவற்ற வயோதிபர்கள், ஏழைகள், விதவைகள், இவர்களையும் நாம் ஆதரிக்க வேண்டும். சில தீராத வியாதியினால் கஷ்டப்படுகிறவர்களுக்கும் நாம் உதவி செய்யவேண்டும். ஆகவே ஒவ்வொரு மாதமும் இவர்களுக்கு உதவி செய்ய உங்களுடைய ஜெபத்தினாலும், நன்கொடையினாலும் உற்சாகமாய் தாங்குங்கள்.**

தேவையில் உள்ள ஆயிரக்கணக்கான மக்களுக்கு பல உதவிகளை தொடர்ந்துச் செய்ய ஊக்கமாக ஜெபியுங்கள்.

இன்னும் அநேக இடங்களில் ட்யூசன் சென்டர் கேட்கிறார்கள். அதற்கான முயற்சிகளை நாம் செய்ய வேண்டும். **நமது ட்யூசன் சென்டரில் படித்து வந்த மாணவர்களில், மூன்று மாணவர்கள் கர்த்தருடைய கிருபையினால் நீட் தேர்வில் தேர்ச்சி பெற்று மருத்துவ படிப்பில் சேர்ந்துள்ளனர்.**

## S J Saves Trust க்கு உதவி செய்தவர்களின் பெயர்கள்

கடந்த மாதம் அன்பரின் ஊழிய பங்காளர்களான ஒரு வயதான தாயும், தகப்பனும் அன்பரின் ஊழிய ஜெபஸ்தலத்திற்கு நேரில் வந்து, ஏழை விதவை தாய்மார்களுக்கு தரும்படி நல்ல புதிய புடவைகளும், ஜாக்கெட் துணியும் எங்களிடம் கொடுத்து சென்றார்கள். பென்ஷன் வாங்குகின்ற அவர்கள் ஏழைகளை மறவாமல் செய்த நற்கிரியை மிகவும் பாராட்டத்தக்கது.

S J Saves Trust பணிகளுக்கு உதவி செய்த **திருமதி. ராதா, திரு.முருகன், Dr.P.சாமுவேல், Dr.Pr. ராபர்ட் ஜார்ஜ், திரு.ஆனந்த அருள்தாசன், திரு.வாசுதேவன், திரு. மரியா அகஸ்டின், தம்பி ஜெரால்டு, திருமதி. செரில், Sis. வெர்ஜினி ரெட்டி, Sis. சுகப்பிரியா, Sis. சுஜாதா** மற்றும் உதவி செய்த ஒவ்வொருவருக்கும் எங்கள் நன்றியை தெரிவிக்கிறோம்.

**அன்பு பங்காளர்கள் உங்கள் ஒவ்வொருவரையும் தேவன் ஆசீர்வதிப்பாராக!**

**ஏழை எளியவர்களுக்கு உதவிட கீழ்க்காணும் வங்கியின் மூலமாக அனுப்பவும்.**

| | | |
|---|---|---|
| Bank A/c Name | : | SJ Saves Trust |
| Account No. | : | 019150310875369 |
| Bank Name | : | Tamil Nadu Mercantile Bank |
| Branch | : | Palakarai, Trichy. |
| IFS Code | : | TMBL0000019 |
| A/c Type | : | Current |

**மருத்துவமனை பணிகளுக்கு கீழ்க்காணும் வங்கியின் மூலமாக அனுப்பவும்.**

| | | |
|---|---|---|
| Bank A/c Name | : | SJ Saves Trust |
| Account No. | : | 36477148891 |
| Bank Name | : | State Bank of India |
| Branch | : | Cantonment, Trichy Main Branch |
| IFS Code | : | SBIN 0000930 |
| A/c Type | : | Current |

**IT Act-ன்படி Sec. 80G Exemption உண்டு**











# S.J.S.T கிராமப்புற மருத்துவமனை பணிகள்

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் நமது மருத்துவமனை அநேக கிராமப்புற ஏழை நோயாளிகளுக்கு மிகவும் பிரயோஜனமாக இருக்கிறது. தற்பொழுது அநேக நோயாளிகள் வந்து சிகிச்சை பெற்று வருகிறார்கள். அன்புள்ளம் கொண்ட நம்முடைய பங்காளர்களாகிய சில மருத்துவர்கள் செய்த உதவியினால் **ULTRA SOUND SCAN machine** வாங்குவதற்கு கர்த்தர் உதவி செய்துள்ளார். அதற்காக கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன்.

**S.J.S.T** மருத்துவமனை பற்றிய திட்டத்தை கர்த்தர் தாமே எனக்கு தந்தார். என்னுடைய 32-ம் வயதிலேயே மருத்துவமனையைப் பற்றி என்னோடு திட்டமும் தெளிவுமாக கர்த்தர் பேசினார். எனவே தான் இந்த மாபெரும் திட்டத்திற்கு நீங்களும் கண்டிப்பாக ஜெபித்து, தொடர்ந்து உதவிகரம் நீட்டுங்கள்.

நம் மருத்துவமனையானது முன்பு இருந்த ஒரு கட்டிடத்தையே சரிசெய்து அதில் இயங்கிக் கொண்டிருக்கிறது. **தற்பொழுது நம் மருத்துவ மனைக்கு என புதிதாக ஒரு கட்டிடம் எழுப்ப, மருத்துவ உபகரணங்களுடன் சேர்த்து கோடிக்கணக்கில் தேவைப்படுகிறது.** இந்த தேவைகள் சந்திக்கப்பட ஊக்கமாய் ஜெபியுங்கள்! நீங்களும் தாராளமாய் உதவுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

இப்போதும் நாம் மிகவும் அவசரமாக **இதய நோயாளிகளுடைய வசதிக்காக Defibrillators, Ventilators with Cylinder & Vaporizer ஆகிய உபகரணங்கள் வாங்கவேண்டும். மொத்தம் இதற்கு Rs.11,00,000/-தேவை. இது சந்திக்கப்பட ஜெபியுங்கள்.**

நீங்கள் ஜெபிக்கும் பொழுது கர்த்தர் தாமே நிச்சயம் பெரிய காரியங்களை செய்வார். கர்த்தருடைய அன்பு பணியை நாம் அசதியாக செய்யக் கூடாது. முழு மூச்சுடன் உற்சாகத்துடன் செய்யவேண்டும். அப்பொழுது தான் தேவன் நம் மத்தியில் அற்புதங்களை செய்வார். இதுவரை மருத்துவமனைக்கு உதவி செய்து வந்த உங்கள் ஒவ்வொருவரையும் கர்த்தர் தாமே நிறைவாக ஆசீர்வதித்து காப்பாராக!





Tamil Whats App No: 95004 87059